அவ்வளவு விரைவிலே நாமும் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதாக இருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசு மத்திய அரசோடு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறது.

தமிழக மின் கழகம்

மு.ப. 9-30 *116 வினா.—திரு. நா. வீராசாமி: மதிப்பிற்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு மின் கழகத்தில் பொது மக்களின் பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரை "Board Member" ஆக சேர்த்துக் கொள்ளும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்திய மின்சாரம் (வழங்குதல்) சட்டம் (1948)-ன் செக்ஷன் 5 (6) பிரிவின்படி தமிழ் நாட்டு மின் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது பாராளு மன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ அங்கத்தினராக நியமிக்க இயலாது.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் மின் திட்டத்தில் நம் அரசாங்கத்திற்கும், கேரள அரசாங்கத்திற்கும், நீராறு, பெரவாரிப் பள்ளம் இவைப்பற்றி நேரில் பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வுகாண நம் மாநில மின் துறை தலைவரை கேரளத்திற்கு அனுப்பு வார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அது பற்றி சோனல் கவுன்சிலில் பேசி முடிவு எடுக்கப்பட்டு, இந்த இரண்டு சர்க்கார்களும் தனித்தனியாக அவரவர்களுடைய கோரிக்கைகளை விளக்கி அறிக்கைகள் தயாரிக்கப்படவேண்டும் என்றும், அதன்பிறகு இரண்டு அரசின் அதி காரிகளும், தேவைப்பட்டால் அமைச்சர்களும், பேச்சு நடத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*117 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் என்றால் அதற்கான காரணங்கள் யாவை?.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டில்தான் (1966-67) தற்காலிக உற்பத்தி நடந்தது. அதனால் இந்த ஆலை நஷ்டத்தில் நடக்கிறதா என்பது இப்பொழுது சொல்வதற்கில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த ஆலை ஆரம்பித்து சில ஆண்டுகள் ஆகியும், சென்ற ஆண்டு தேர்தல் சமயத்திலே, எலக்ஷனுக்காக சில நாட்கள் நடத்திவிட்டு, இன்றைக்கு மூடி இருக்கிறது. அது நடக்காததற்குக் காரணம் என்ன? பல கோடி ரூபாய்கள் மூலதனமாகப் போட்டு, ஆலை நடக்காமல் இருக்கிறது. அதை இனிமேலாவது நடத்த என்ன நட வடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு இந்த ஆலைக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஒரு ஆயிரம் டன் கரும்பு பிழியும் தொழிற்சாலையாக இருக்கும் என்ற நோக்கத்தோடு இது ஆரம்பிக்கப்பட்டது. 23-12-1966-லிருந்து இது பணி

1967, ஜூன் 30]

யாற்றத் தொடங்கி, 13–2–67 வரையில் 4,109 டன் கரும்பு பிழியப்பட்டது. இதற்கு அரசாங்கத்தால் பங்குதாரராக ரூ.25 லட்சம் தரப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 43,000 வேண்டும் என்று திட்டம் போடப்பட்டுள்ளது. இந்த ஆலை தொடர்ந்து வேலை செய்ய இன்னும் ரூ. 30 லட்சம் தேவைப்படும் என்று அந்த ஆலையின் இயக்குனரும், நிர்வாகக் குழுவினரும் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த சர்க்கரை ஆலை வேலை செய்ய வேண்டிய கரும்பு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. கரும்பைக் கொண்டு வெல்லம் காய்ச்சுவதில் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. ஆகவே, மில்லில் விவசாயிகளின் கரும்புக்கு அதிக விலை கொடுக்க மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் யோசனை கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இங்கே இருக்கும் நிலைமைகளில், கரும்பு பற்றாக்குறையா, கரும்பை வேறு வகைக்கு பயன்படுத்துகிறார்களா, நிர்வாகத்தில் கோளாறு என்பதெல்லாம் பரிசீலிக்கப்படுகிறது. இங்கே நெருக்கடி நிலைமையைத் தீர்க்க, குழுத் தலைவர் ரூ. 30 லட்சம் கிடைத்தால்தான் தொடர்ந்து இதை நடத்தமுடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, அலங்கா நல்லூர் வட்டாரத்தில் விவசாயிகள் கரும்பு உற்பத்தியில் பிரசித்திப் பெற்றவர்கள் என்று இருந்தும், அவர்களுக்குக் கடன் வசதிகள் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவர்களுக்கு ஆலை நிர்வாகத்தோடு தொடர்பு இல்லாததால் கடன் வசதிகளை ஆலையிலிருந்து நேரிடையாகப் பெற முடியவில்லை. அப்படி நேரிடையாக ஆலையிலிருந்து கடன்கள் கொடுக்க ஏற்பாடு செய்யுமா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆனாலும், உறுப்பினரின் கருத்து ஆராயப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, இந்த ஆலை தொடர்ந்து நடக்காததற்குக் காரணம், கரும்பு பற்றாக்குறை என்று குறிப்பிட்டார்கள். கரும்பு பற்றாக்குறைதான். ஆனால், அந்த ஆலைக்கு ஆண்டு ஒன்றுக்கு வேண்டிய கரும்பு 6,500 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப் படவேண்டும். அப்படி கரும்பு பயிரிட்டதால்தான், அந்த ஆலை வெற்றிகரமாக ஓட முடியும். சர்க்காருக்குத் தெரியும், இன்றைக்கு கரும்பு உற்பத்தி செய்யப்படுவது அந்தப் பகுதியில் 1,200 ஏக்கரில்தான். ஆக இன்னும் கிட்டத்தட்ட 5,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு உற்பத்தி தேவைப்படுகிறது. அதற்கு கடன் வசதிகளும் வேண்டும். அப்படி கடன் வசதிகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் . . .

(திரு. சீமைச்சாமி தன் இடத்தில் நின்றுகொண்டே இருந்தார்.)

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உறுப்பினர் உட்காரவேண்டும். நான் எழுந்தால், உறுப்பினரவர்கள் உட்கார்ந்துவிட வேண்டும்.

(திரு. சீமைச்சாமி அவர்கள் உட்கார்ந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனையோ முறை, பல முறைகள் சொல்லியுள்ளேன். நீண்ட Lengthy questions are not allowed, என்று தங்களுக்கு விதியைக்கூடப் படித்துக் காட்டியிருக்கிறேன். தாங்கள் கேள்வியைக் கேட்கவேண்டுமே தவிர, ஒரு சொற்பொழிவு நடத்தக் கூடாது. அவையில் நீண்ட கேள்விகள் கேட்கக்கூடாது என்பது 31 (10)–ல் உள்ள விதி.

திரு. கரு. சீமைச்சாமி : கேள்வியைக் கேட்க, இவறறையெல்லாம் சொன்னால்தான் சரியாக வரும், சார் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க அவற்றையெல்லாம் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்றால், கேள்வியை தாங்கள் கேட்க முடியாது. நீண்ட கேள்வியை கேட்கக் கூடாது என்று 31 (10) என்கிற விதியைக் காட்டியப் பிறகும், தாங்கள் அப்படிக் கேட்டால்தான் சரிப்படும் என்றால், நடைமுறை விதிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல இருக்கிறது. முன்பே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன் இதுபற்றி. இரண்டாவது முறையும் சொல்லியிருக்கிறேன். துணைக்கேள்வி கேட்கும் போது, தாங்கள் விரிவாகப் பேச ஆரம்பித்தால், இந்தப் பேரவையின் விலைமதிக்க முடியாத நேரத்தை விரயம் செய்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டு ஏற்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு ஆலைகள் எவ்வளவு? அவைகளிலிருந்து உற்பத்தி செய்யப் படும் சர்க்கரை ஆண்டுதோறும் எவ்வளவு டன் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்வி, அலங்கா நல்லூர் ஆலையைப்பற்றியது. தனிக் கேள்வி போட்டால் உறுப்பினர் கேள்விக்கு விவரம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன், மதுரை மாவட்ட சர்க்கரை ஆலை பற்றி துணைக் கேள்வி ஒன்றைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், போதுமான அளவிற்கு கரும்பு கிடைக்க, மேலும் போதுமான அளவிற்கு, அதிகப்படியான பங்குதார்களைச் சேர்த்துக்கொண்டு, கரும்பை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1–5–67-ல் ஏற்பட்டிருக்கிற புது நிர்வாகக் குழு இவற்றையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பரிசீலனையின் இறுதியில் முடிவு செய்கிறார்களோ அதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீமைச்சாமி தன் கேள்வியைக் கேட்பார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், தனியார் துறையில் இன்று டன் ஒன்றுக்கு ரூ. 75 அல்லது 80 வரை கிடைக்கிறது ; ஆனால், அலங்கா நல்லூர் ஆலையில் ரூ. 55 தான் கொடுக்கிறார்கள். ஆகவே, கரும்பு விலையைக் குறைத்திருப்பதால் கரும்பு கொடுக்கத் தயங்குகிறார்கள். அங்கே கரும்பு விலையை உயர்த்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காரணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அந்தக் காரணங்களிலே இதுவும் ஒரு காரணமாக இருந்தால், தக்க பரிகாரம் தேடப்படும்.

Ground water for agriculture

*118 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that Madras Government is contemplating to explore the availability of ground water for agricultural purposes in Cauvery Delta area with United Nations Aid Project ?